**SEKOLAH JENIS KEBANGSAAN (TAMIL) KAHANG BATU 24,**

**86700 KLUANG,JOHOR**

***தேசிய வகை கஹாங் தமிழ்ப்பள்ளி, 86700 குளுவாங், ஜொகூர்.***

கொடுக்கப்பட்ட பதிலைக்கொண்டு கோடிட்ட இடத்தை நிரப்புக.

**வாசிப்பதால் ஏற்படும் நன்மைகள்**

'ஓதாமல் ஒரு நாளும் இருக்க வேண்டாம்' என _______________ முதுமொழி நல்ல நூலை நாளும் படிக்க நம்மை_________________. நல்ல நூல்கள் நமக்கு நண்பர்களாக அமைகிறது. வாசிக்கும் பழக்கத்தைக் ____________________பல நன்மைகளை அடைகின்றனர்.

தமிழ், ஆங்கிலம் ______________________போன்ற பல மொழிகளில் வாசிக்கும் ஒருவருக்கு அந்த மொழிகளில் சரளமாகப் பேசவும் எழுதவும் உதவி புரியும். இது தன்னம்பிக்கையை அதிகரிக்கும். வேற்று இனத்தவரிடம் பேசும்போது தயக்கம் இல்லாமல் ___________________ முன் வைக்கலாம்.

வாசிப்பதால் பல புதிய ____________________ கற்றறிய முடியும். இந்தப்பழக்கம் நல்ல பேச்சாற்றலையும் எழுத்தாற்றலையும் உருவாக்கும். இது நல்ல திறமைசாலிகள் உருவாக வாய்ப்பைத் தரும். அதோடு மட்டும் இல்லாமல் ___________________ சிறந்த புள்ளிகள் பெற உதவியாகவும் இருக்கும்.

நாளிதழ்கள், சஞ்சிகைகள் ஆகியன வாசிப்பது நல்ல _____________________ இருக்கிறது. பொது அறிவை வளர்த்துக்கொள்ள ஏதுவாக அமைகிறது. உள்நாட்டு வெளிநாட்டுத் தகவல்களை அறிந்து கொள்ள வாய்ப்பாக இருக்கும். ஒப்புற ஒழுகு என்பதற்கொப்ப உலக ____________________ நாம் வாழ வழி வகுக்கிறது.

ஆகவே, வாசிப்பே சுவாசிப்பு எனும் கூற்றுக்கு ஏற்ப நாளொரு நல்ல தகவலாவது வாசிப்பதைப் ______________________ வேண்டும். 'ஐந்தில் வலையாதது ஐம்பதில் வலையுமா?, என்பதை மனதில் வைத்து இளம் வயதிலேயே வாசிக்கும் பழக்கத்தை நமக்குள் ஏற்படுத்துவது சிறப்பு.

**ஔவையின்**

| | | |
|---|---|---|
| **தேசிய மொழி** | **கருத்துகளை** | **மகிழியாகவும்** |
| **தகவல்களைக்** | **வலியுறுத்துகிறது** | **நடைமுறைக்கேற்ப** |
| **கொண்டிருப்பவர்கள்** | **தேர்வுகளில்** | **பழக்கப்படுத்த** |

LIVEWORKSHEETS